பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 682 **நாள்: 16.11.2026**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் இன்று (16.11.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-36க்குட்பட்ட விவேகானந்த நகரில், கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தின் கட்டுமானப் பணிகளையும், கண்ணன் தெருவில் கட்டப்பட்டு வரும் சென்னை நடுநிலைப்பள்ளியின் கட்டுமானப் பணிகளையும், முல்லை நகர், மேம்பாலம் அருகில் நீர் சேகரித்து வெளியேற்றும் அறை, எம்.கே.பி.நகர், 3ஆவது தெருவில் உள்ள இலவச ஒப்பனை அறையினை பார்வையிட்டு ஆய்வு செய்து, தூய்மையாக பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு. எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு-104க்குட்பட்ட 1ஆவது பிளாக், 2ஆவது தெருவில் நடைபெற்று வரும் நூலகக் கட்டடப் பணி, பிரிக்ளின் சாலையில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணி, வார்டு-95க்குட்பட்ட பாடி மேம்பாலத்தில் உள்ள சாலையின் மையத் தடுப்புப் பகுதியில் அழகுச் செடிகள் நடப்படும் பணி, வார்டு-99க்குட்பட்ட நேரு பூங்காவில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணி, திடீர் நகர் பகுதியில் கட்டப்பட்டு வரும் ஒப்பனை அறை கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு. அ.தாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் மண்டலம், வார்டு-143க்குட்பட்ட நொளம்பூர் பகுதியில் விளையாட்டுத் திடல் அமைக்கும் பணி, நொளம்பூர் பகுதியில் உள்ள நவீன எரிவாயு தகன மேடையின் செயல்பாட்டினையும், வார்டு-144க்குட்பட்ட மதுரவாயல், சன்னதி தெருவில் பள்ளி மாணவர்களின் காலை உணவிற்கான சமையல் கூடம், உணவுப் பொருட்களின் இருப்பு குறித்து ஆய்வு செய்து, பள்ளி மாணவர்களுக்கு தரமான உணவினை வழங்கிடவும், சமையல் அறையினைத் தூய்மையாகப் பராமரித்திடவும், நொளம்பூர் யூனியன் சாலையில் உள்ள ஜெயின் நட்சத்திர அடுக்குமாடி குடியிருப்பில், உருவாகும் பெருமளவு கழிவுகளை முறையாக தரம்பிரித்து வழங்கிட மக்களிடம் அறிவுறுத்தினார்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி